செய்தி வெளியீடு எண்.13/2011 நாள்: 30.7.2011

**<u>அம்பத்துார் நகராட்சிப் பகுதியில் ரூ.488.97 கோடி மதிப்பிட்டில் குடிநீர் மற்றும் கழிவுநீர் திட்டப் பணிகள் – திட்டப் பணிகளை பணிக்காலத்திற்குள் முடிக்க அதிகாரிகளுக்கு சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., உத்திரவு</u>**

அம்பத்துார் நகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று திட்டப்பணிகளை பார்வையிட்ட சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் திட்டப்பணிகளை பணிக்காலத்திற்குள் முடிக்க அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார்.

அம்பத்துார் நகராட்சி, ஜெ.ஜெ. நகரில் குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத தெருக்களில், குடிநீர் ஊர்திகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதையும் அடிக்கடி கழிவுநீர் அடைப்பு ஏற்படும் தெருக்களையும், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று திட்டப்பணிகளையும், நிர்வாக இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

சாய் கார்டன் பகுதியில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதையும், அடிக்கடி கழிவுநீர் அடைப்பு ஏற்படும் வெல்கம் காலனியையும், கழிவுநீர் உந்து நிலைய மேம்பாட்டுப் பணி நடைபெறும் இமயம் காலனியையும் நிர்வாக இயக்குநர் பார்வையிட்டார்.

இப்பகுதியைச் சார்ந்த சாய் கார்டன் மற்றும் டி.வி.எஸ். காலனி பொது மக்களிடம் குடிநீர் விநியோகம் பற்றி கேட்டறிந்தார். அப்போது சாய் கார்டன் பகுதியைச் சார்ந்தவர்கள் தங்கள் பகுதிக்கு விரைவில் குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும் எனவும், நடைபெற்றுக் கொண்டு இருக்கும் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை விரைவில் முடித்துத் தர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

பின்னர் நிர்வாக இயக்குநர் தெரிவித்ததாவது:

அம்பத்துார் நகராட்சியில் ரூ.220.97 கோடி மதிப்பீட்டில் 26 கழிவுநீரேற்று நிலையம் மற்றும் கழிவுநீர் குழாய் அமைக்கும் பணிகளும் , ரூ.268.20 கோடி மதிப்பீட்டில் 22 மேல் நிலைத் தொட்டி மற்றும் குடிநீர் குழாய் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த திட்டப்பணிகள் வாயிலாக சுமார் 4 இலட்சத்து 42 ஆயிரம் பொது மக்கள் பயன்பெறுவார்கள்.

மேற்கு ஜெ.ஜெ.நகர் பாரதி சாலையில் நடைபெற்று வரும் கழிவுநீரகற்று நிலைய கட்டுமானப் பணிகளை அடுத்த ஆண்டு ஜுலை மாதத்திற்குள் முடிக்க உத்திரவிடப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் மேல் நிலைத் தொட்டி மற்றும் நீரேற்று நிலைய கட்டுமானப் பணிகள் இவ்வாண்டு நவம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது..

குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரை 489 கிலோ மீட்டர் குடிநீர் குழாய்கள் பதிக்கப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் முகப்பேர், பாடி, அண்ணாநகர் மேற்கு , அத்திப்பட்டு, ஒரகடம், கள்ளிக்குப்பம், புதுார், மேனாம்பேடு, பானுநகர் உட்பட அம்பத்துார் பகுதியில் சுமார் 75 ஆயிரம் குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு நிர்வாக இயக்குநர் தெரிவித்தார்.

பின்னர் முகப்பேர் மேற்குப் பகுதியில் நீரேற்று நிலையத்தினையும், லாரிகளில் நீர் நிரப்பப்படுவதையும் நிர்வாக இயக்குநர் ஆய்வு செய்தார்.

மக்கள் தொடர்பு மேலாளர்